சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் 09.09.2025

வா.சா.1 – வள்ளி க/பெ. பெரியசாமி

O.S. No.266/2023

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

வழக்கு 2ம் இன சொத்து தொடர்பான நான்குமால் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் நான் விவசாயம் செய்து வந்தேனா என்றால் செய்து வந்தேன். நாங்கள் வேலி மட்டும் தான் அடைத்து வைத்திருந்தோம். என் சார்பாக என் அண்ணன் தர்மராசு தான் விவசாயம் செய்து வந்தார். என் அப்பாவின் பெயரில் UDR மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழக்கு சொத்தின் பட்டா ஆண்டி பெயரில் மாற்றப்பட்டது என்றால் சரிதான்.UDR மேம்பாட்டு திட்டத்திற்கு முன்பு வழக்கு சொத்து யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் யார் பெயரில் இருந்தது என்று தெரியவில்லை. அழகர்சாமி என்பவரிடம் இருந்து என் அப்பா கிரையம் பெற்றார். வழக்கு சொத்து அழகர்சாமி பெயரிலோ கன்னையா பெயரிலோ எந்த காலத்திலும் பட்டா இருந்ததில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தானது, 1ம் பிரதிவாதி பாண்டியம்மாளின் தாயாரான ஆயி பெயரில் பட்டா எண்.1110ல் இருந்து வந்தது என்றால் சரியல்ல. பாண்டியம்மாள் மனுவின் பெயரில் தான் விசாரணைக்கு பிறகு UDR மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தவறான பட்டா என் அப்பா பெயரில் உள்ளதை ரத்து செய்து மீண்டும் பாண்டியம்மாள் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியான பாண்டியம்மாளுக்கு வழக்கு சொத்து பாத்தியம் என்பதால் தான் அவர் 2ம் பிரதிவாதியான உடையப்பனுக்கு சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. என் அப்பா பெயரில் உள்ள சொத்தை மோசடியாக பாண்டியம்மாள் விற்பனை

செய்துவிட்டார். நாங்கள் வெளியூரில் இருந்ததால் தெரியவில்லை. பாண்டியம்மாள் மற்றும் உடையப்பன் நான் வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது மறித்தார்களா என்றால் இல்லை வழக்கு சொத்தில் JCB முட்புதர்களை நீக்கிகொண்டுஇருந்தது அப்போது நான் சென்று மறித்தேன். இதுதொடர்பாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, அவர்கள் வேலையை நிறுத்திகொண்டதால் புகார் கொடுக்கவில்லை. எங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி பணம் தருவதாகவும் குறிப்பிட்டார்கள். என்னுடைய வழக்குரையில் காவல்நிலையத்தை அணுகிய போது சிவில் பிரச்சினை என்பதால் நீதிமன்றத்தை அணுகுமாறு குறிப்பிட்டுள்ளது தவறா என்றால் ஆம் தவறுதான், நான் போலிஸ் ஸ்டேசனிற்கு செல்லவில்லை. நான் கள்ளந்திரியில் வசித்து வருகிறேன். வழக்கு சொத்து தெற்குதெரு ஆற்றங்கால் ஓரமாக இருக்கிறது. நான் வெளியூரில் வசித்து வருவதால் வழக்கு சொத்தை பற்றி தெரியவில்லை என்றால் சரியல்ல. வழக்கு 1ம் இன சொத்தான 50 செண்டு என் அப்பா பெயரில் தான் பட்டா உள்ளது. 1ம் இன சொத்தை பொறுத்து பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தெரியவில்லை. மேற்படி 1ம் இன சொத்து 50 செண்டை பொறுத்து 2ம் பிரதிவாதி உடையப்பன் கிரையம் வாங்கிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து என்னுடைய அனுபவத்தில் உள்ளதை காட்டுவதற்கு கிஸ்து ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தை பற்றிய எந்த விபரமும் சரியாக தெரியவில்லை என்பதால் தான் அது தொடர்பான விபரங்களை பொறுத்து சாட்சியம் அளிக்க இயலவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து என் பெயரிலோ, என் தகப்பனார் ஆண்டி பெயரிலோ எந்த காலத்திலும் பட்டா இருந்ததில்லை என்றும் UDR மேம்பாட்டு திட்டத்திற்கு பிறகு என் தகப்பனார் பெயருக்கு பட்டா மாற்றப்பட்ட பிறகு பட்டா ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொ்துது எந்த காலத்திலும்

என் பெயரிலோ என் தகப்பனார் ஆண்டி பெயரிலோ இருந்ததில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்ச ரியல்ல.

3 மற்றும் 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.09.09 17:54:09 +0530

Sub Judge

Melur